NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 31 May 2017

# உடல்நலத்தைப் பாதிக்கும் அம்சங்களைக் கண்டறிய ஆய்வு

மனநலத்திற்கும் உடல் நலத்திற்கும் இடையிலான தொடர்பைக் கண்டறிய புதிய ஆய்வு ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. நான்கு ஆண்டுகளுக்கு மேற்கொள்ளப்படவிருக்கும் இந்த ஆய்வு, உடல்நலத்தை மேம்படுத்தும் அம்சங்களில் கவனம் செலுத்தும் என்று சாவ் சுவீ ஹோக் பொதுச் சுகாதாரப் பள்ளி தலைவர் சியா கீ செங் தெரிவித்தார்.

சுமார் 10,000 பேர் பங்கேற்கவுள்ள இந்த ஆய்வில் கேள்வி–பதில் அங்கங்கள், நேர்காணல்கள் போன்றவை இடம்பெறும். இந்த ஆய்வு 2021ஆம் ஆண்டில் நிறைவுபெற்றவுடன் அதன் முடிவுகளை அரசாங்கத்திடம் ஒப்படைக்கும்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.